# மே மாத சாட்சிகள் - 2017

1. ஜோசப் கில்பட் - நெல்லிக்குப்பம்



என் பேத்தி பத்தாம் வகுப்பு தேர்வில் வெற்றிபெற வேண்டுமென்று எம்மாவுஸ் வந்து செபித்தேன். வெற்றி பெற்று விட்டாள். இயேசுவுக்கு நன்றி!



2. ரோஸ்மேரி - போளூர்

என் பிள்ளைகளின் திருமணம் நல்லமுறையில் நடைபெற வேண்டும் என்று எம்மாவுஸ் வந்து செபித்தேன். என் பிள்ளைகளின் திருமணம் நல்லமுறையில் நடைபெற்றது. இயேசுவுக்கு நன்றி!

3. இருதயராஜ் - திண்டிவனம்



என் தந்தைக்கு நல்லமுறையில் இருதய அறுவை சிகிச்சை நடைபெற வேண்டும் என்று முதல் சனிக்கிழமை ஒரு நாள் தியானத்தில் கலந்துக்கொண்டு செபித்தேன். என் தந்தைக்கு நல்லமுறையில் அறுவை சிகிச்சை நடைபெற்று நலமாக உள்ளார். இயேசுவுக்கு நன்றி!



4. அன்னம்மாள் - கொக்கம்பாளையம்

என் அக்கா பேரபிள்ளையை காணவில்லை எனவே நான் எம்மாவுஸ் வந்து செபித்தேன். காணமல் போன பிள்ளை கிடைத்து விட்டது. இயேசுவுக்கு நன்றி!

5. டேவிட் - தியாகதுருவம்



என் மகள் பத்தாம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற வேண்டுமென்று செபித்தேன் என் மகள் வெற்றி பெற்றுவிட்டாள், மேலும் என் கடன் தொல்லைகளும் நீங்கியது. இயேசுவுக்கு கோடான கோடி நன்றி!

6. பெரியநாயகி - மேல்வழி



என் பேத்திக்கு உள்நாக்கில் சதை வளர்ந்து இருக்கிறது என்று மருத்துவர் கூறிவிட்டார். நான் அந்த மாதமே எம்மாவுஸ் வந்து செபித்துவிட்டு, எண்ணெய், உப்பை கொண்டு கொடுத்தேன். அதை பயன்படுத்திய பிறகு மருத்துவரிடம் சென்றோம். ஒன்றும் இல்லை நன்றாக இருக்கிறாள் என்று கூறினார். சுகம் தந்த இயேசுவுக்கு நன்றி!



7. ஸ்டெல்லா - சவேரியார்பாளையம்

என் மகளுக்கு வைரஸ் காய்ச்சல் அதிகமாக இருந்தது. நான் கண்ணீரோடு செபித்தேன். என் மகள் சுகம் அடைந்தாள் இயேசுவுக்கு நன்றி!

8. ஜெயமேரி - விருத்தாசலம்



என் மகளுக்கு பிரசவத்திற்காக மருத்துவமனை அழைத்து சென்றோம். மூன்று மருத்துவமனையில் என் மகள் ஆபத்தான நிலையில் இருக்கிறாள் முடியாது என்றுக் கூறிவிட்டார்கள். ஆனால் நான் கண்ணீரோடு செபித்தேன். என் மகளின் உயிரை காப்பாற்ற முடியாது என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். ஆனால் என் இயேசு என் மகளுக்கு சுகப்பிரசவத்தை தந்து தாயையும், சேயையும் காப்பாற்றினார். இயேசுவுக்கு நன்றி!



9. அந்தோனக் - புதுச்சேரி

எங்கள் வீட்டில் தீய சக்திகளை அழிக்க வேண்டும் என்று விண்ணப்பம் எழுதினேன். ஆண்டவர் எல்லா தீய சக்திகளையும் அழித்துவிட்டார். இயேசுவுக்கு நன்றி!

10. ஆரோக்கியமேரி - அணைகரை கோட்டாளம்.




என் கழுத்தில் கட்டியிருந்தது. நான் மருத்துவரிடம் சென்றேன். புற்றுநோய் கட்டி என்றுக் கூறிவிட்டார்கள். நான் கண்ணீரோடு செபித்தேன். பிறகு மருத்துவரிடம் சென்றேன். அறுவை சிகிச்சை செய்து பரிசோதித்த பிறகு சாதாரண தைராய்டு கட்டி என்றுக் கூறிவிட்டார்கள். இப்போது பூரண சுகம் அடைந்துவிட்டேன் இயேசுவுக்கு நன்றி!



11. ஆரோக்கியமேரி - பழையனூர்

என் மகனுக்கு தீய ஆவி பிடித்து அவதிப்பட்டு கொண்டிருந்தான். நான் கண்ணீரோடு செபித்தேன். என் மகன் சுகம் பெற்றான். மேலும் எங்கள் மாடு ஒன்று உடல் நிலை சரியில்லமல் இருந்தது. நாங்கள் அந்த மாட்டை வைத்துதான் பிழைப்பு நடத்துகிறோம், மாடு நலமடைய வேண்டும் என்று ஆண்டவரிடம் செபித்தேன் சுகம் கிடைத்தது. இயேசுவுக்கு நன்றி!

12. மார்டின் - உடையார்குப்பம்



என் அக்கா என்னிடம் பணம் கொடுத்து வைத்திருந்தார்கள், அதை என் உறவினரிடம் கொடுத்தேன். அவர் வாங்கிக்கொண்டு இல்லை என்று கூறி விட்டார். நான் அவர் மனம்மாறி பணத்தை கொடுக்க வேண்டும் என்று செபித்தேன். பணத்தை திருப்பிக் கொடுத்துவிட்டார். இயேசுவுக்கு நன்றி!



13. மரிகுழந்தை - எறையூர்

எனக்கு ஒரு கால், கை அசைவின்றி மூன்று மாதம் வேதனைப்பட்டேன். எம்மாவுஸ் எண்ணெய்யை தடவி கொண்டு மூன்று மாதமாக எம்மாவுஸ் வந்து செபித்தேன். இப்போது என் கை, கால்கள் நன்றாக உள்ளது. இயேசுவுக்கு நன்றி!

14. அருண்ராபின்சன் - கானை



நான் பத்தாம் வகுப்பும், என் அண்ணன் பணிரெண்டாம் வகுப்பு தேர்வு எழுதினோம். நாங்கள் இருவரும் தேர்வுக்கு செல்லுமுன் எம்மாவுஸ் எண்ணெய் தடவி செல்வோம். இருவரும் வெற்றிபெற்று விட்டோம். இயேசுவுக்கு நன்றி!



15. கபிலாதிமாஷ் - புதுச்சேரி

எனக்கு சிறுநீரகத்தில் பிரச்சனை இருந்தது. ஒவ்வொரு அம்மாவாசைக்கும் எம்மாவுஸ் வந்து நான் கண்ணீரோடு செபித்தேன். சுகம் கிடைத்தது இயேசுவுக்கு நன்றி!

16. எனக்கு அடிவயிற்றில் கட்டியிருந்தது அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர் கூறிவிட்டார். நல்லமுறையில் நடைபெற்று சுகம் பெற செபித்தேன். சுகம் அடைந்தேன். இயேசுவுக்கு நன்றி!





17. ஜெயந்தி ஸ்டெல்லாமேரி - செங்கமேடு

என் கணவரின் சகோதர்கள் பிரச்சனை செய்து கொண்டு இருந்தார்கள். என் பிள்ளைகளுக்கு புது நன்மையும் நல்லமுறையில் நடைபெற செபித்தேன். பிரச்சனையில்லாமல் நல்லமுறையில் நடைபெற்றது. இயேசுவுக்கு நன்றி!

18. குழந்தைமேரி, சவேரியார்புரம்



எனக்கு நெஞ்சுவலி வந்தது எம்மாவுஸ் எண்ணெய் தடவி செபித்தேன் சுகம் கிடைத்தது. இயேசுவுக்கு நன்றி!



19. சகாயமேரி, செங்கமேடு
என் காதில் ஏதோ சத்தம் வந்துக் கொண்டேயிருந்தது. அதற்காக செபித்தேன். எம்மாவுஸ் எண்ணெய் தடவி செபித்தேன். சுகம் கிடைத்தது. இயேசுவுக்கு நன்றி!

20. தெரசம்மாள் - கொரட்டூர்
என் பேரன் பண்ணிரெண்டாம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற செபித்தேன். வெற்றி பெற்றுவிட்டான் இயேசுவுக்கு நன்றி!





21. வனத்தையன் - வடலூர்
என் மகளுக்கும், மருமகனுக்கும், பிரச்சனையாக இருந்தது. அவர்கள் இருவரும் பிரிய வேண்டிய நிலை இருந்தது. நான் கண்ணிரோடு செபித்தேன். அவர்கள் சமாதானமாக இருக்கிறார்கள். இயேசுவுக்கு நன்றி!

22. பௌலின் - நெல்லித்தோப்பு
என் இரண்டாவது மகளுக்கு 2-வது ஆண்குழந்தை பிறக்க வேண்டும் என்று எம்மாவுஸ் ஆண்டவரிடம் ஜெபித்தேன். அதன் படி அழகான ஆண்குழந்தை பிறந்தது. இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!





23. R. சிவேரா, C. நித்தியா, V. சக்கரவர்த்தி - கோவிலானூர்
வேலை கிடைத்தற்காக நன்றியாக ரூ.10,000 காணிக்கையாக என் முதல் மாத சம்பளத்தை கொடுக்கிறேன்.